# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை
## அசல் வழக்கு எண்.242/2019

வா.சா.2– குறுக்கு விசாரணை – நாள் 05–03–2026.

பெயர் = கரந்தமலை

வா.சா.–2 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1,2,5 முதல் 10ம் பிரதிவாதிகள் தரப்பில் கு.வி.–

(1) 1ம் பிரதிவாதி என் தாய்மாமன் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி என் அத்தை 1ம் பிரதிவாதியின் மனைவி என்றால் சரிதான். 5 முதல் 10ம் பிரதிவாதிகள் என் மருமக்கள் என்றால் சரிதான். வா.சா.1 ராமபாண்டி என் உடன்பிறந்த அண்ணன் என்றால் சரிதான். தாவா வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளோம் என்றால் 8 செண்டு இடத்தை என் மாமனார் அவரது மனைவிக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துவிட்டதால் வழக்கு போடப்பட்டுள்ளது. அவர் எப்போது எந்ததேதியில் செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்த விவரம் தெரியுமா என்றால் 2018ம் வருடம் எழுதிக்கொடுத்தார். ஆவண எண் தெரியாது. தாவா சொத்து 24.04.1967ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின்மூலம் என் தாய்மாமாக்கள் தனுஷ்கோடிக்கும், ராமசாமிக்கும் கூட்டுப்பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். அவர்கள் இருவரும் கூட்டாக அனுபவம் செய்து வந்து பட்டா எண்.340 ஏற்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் ஆமாம். கூட்டு பட்டா பெற்ற பிறகு ராமசாமியும், தனுஷ்கோடியும் கூட்டாக அனுபவித்து வந்தனர் என்றால் சரிதான். சர்வே எண்.80/11 தனியாக பிரிக்கப்பட்டு 80/11A, 80/11B என உட்பிரிவு செய்யப்பட்டு பட்டா மாற்றிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

(2) பட்டாவின் அடிப்படையில் 2, 5 முதல் 10ம் பிரதிவாதிகள் தற்போதுவரை கூட்டாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். தாவாச்சொத்தை தனுஷ்கோடியும், ராமசாமியும் என் தந்தைக்கு எந்த தேதியில் எந்த ஆவணம் மூலம் எழுதிக்கொடுத்தனர் என்றால் 1986ம் வருடம் கிரையம் எழுதிக்கொடுத்தனர் தேதி ஞாபகமில்லை. ஆவணம் எண் தெரியாது. தாவாச்சொத்தை என் தந்தை கிரையம் பெற்ற விவரம் எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். தாவாச்சொத்தின் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது.

தாவாச்சொத்தின் நான்குமால் தெரியாது. தாவா வழக்கில் ராமசாமியை ஏன் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் அவர் என் மாமனாருக்கு எழுதிக்கொடுத்துவிட்டதாக சொன்னதால் சேர்க்கவில்லை என சாட்சி கூறுகிறார். மேற்படி ராமசாமி என் உடன்பிறந்த சகோதரி 4ம் வாதி அழகரக்காள் என்பவரை திருமணம் செய்திருந்தார் என்றால் சரிதான். அதன்மூலம் பாண்டி என்ற ஆண்குழந்தை உள்ளது என்றால் சரிதான்.

(3) என் மாமா ராமசாமிக்கும், 4ம் வாதிக்கும் கருத்துவேறுபாடு ஏற்பட்டு பிரிந்து 5ம் வாதியை 2வதாக திருமணம் செய்துகொண்டார் என்றால் சரிதான். 2வது திருமணத்தின்பேரில் மதுபாலா என்ற பெண்குழந்தை உள்ளது என்றால் சரிதான். ராமசாமியும், 5ம் வாதியும் ஒரே குடும்பமாக எங்களுடன் தான் இருக்கிறார்கள் என்றால் சரிதான். என் தகப்பனாருக்கு 1ம் பிரதிவாதியும், ராமசாமியும் எந்த ஒரு ஆவணமும் எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும், ராமசாமி எங்கள் வீட்டில் இரண்டு திருமணங்கள் செய்துகொண்டுள்ளதால் எங்களுக்கு ஆதரவாக சாட்சியமளிக்க வராமல் அவர் தாவாச்சொத்தை எழுதிக்கொடுத்துவிட்டார் என்று ஒப்புக்கொண்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. உண்மையில் தாவா வழக்கு சம்பந்தமாக பரிகாரம் கோரவேண்டும் என்றால் ராமசாமியையும் சேர்த்து நான் வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் அவ்வாறு சேர்க்காத காரணத்தினால் தாவா பரிகாரம் கோரமுடியாது என்றால் சரியல்ல. தாவாச்சொத்தை நாங்கள்தான் அனுபவம் செய்துவருகிறோம் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தெரியாது.

(4) என் தகப்பனாருக்கு எழுதிக்கொடுத்ததாக சொல்லும் கிரைய ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்த சின்னஅழகர்சாமி என்பவர் தற்போது உயிருடன்தான் உள்ளார் என்றால் இல்லை அவர் இறந்து ஒரு வருடம் ஆகிறது. ராமசாமியும், 1ம் பிரதிவாதியும் என் தந்தைக்கு எந்த ஆவணமும் எழுதிக்கொடுக்கவில்லை அந்த ஆவணத்தில் உள்ளது 1ம் பிரதிவாதியின் கையெழுத்தும் இல்லை என்றால் சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2026.03.05 16:02:23 +0530